*6 ஆலைகளில் இத்திட்டம் தொடங்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**87—**

### பேருந்து பணிமனை

***5452—திரு. கடம்பூர் ராஜு:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவில்பட்டி தொகுதி, கயத்தாறில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைகள் எங்கெல்லாம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றனவோ, அவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பணிமனை 71 பேருந்துகளைக்கொண்டு வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பணிமனையாகும். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் 6.01 ஏக்கர் பரப்பளவில் ரூ.70 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிமனை விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், கோவில்பட்டி தொகுதி, கயத்தாறில் மிகக் குறைவான அளவிலேதான் பேருந்துகள் உள்ளன. வருங்காலத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையினை அதிகரித்தபின், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று அங்கு பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2012 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்ற வள்ளுவன் வாக்கினை மெய்ப்பித்து, செறுபகை முடித்து சிறந்ததொரு அரசமைத்து அணுப்பொழுதும் அயராது ஆட்சி செய்யும் எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம் என்பதை நிரூபிக்கும்வண்ணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி கோவில்பட்டியில் உள்ள பணிமனை இடவசதி இல்லாமல் காலம் காலமாக தனியார் இடத்தில் இயங்கி வந்தது. தற்போது அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்று 6 மாதத்தில் ரூ.70 இலட்சம் வழங்கி, என்னையும் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் வழங்கிட வழிவகை செய்திட்டு, புதுப்பொலிவுடன் பணிமனை அமைக்க வழிசெய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 71 பேருந்துகளைக்கொண்டு இயங்கிவருகின்ற ஒரே பணிமனை உள்ளது. எனவே, இங்கு வேறு ஒரு பணிமனை அமைத்து எனது தொகுதியில் போக்குவரத்து வழித்தடங்கள் ஏற்படுத்தித் தர போதுமான ஏற்பாட்டை செய்து தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொகுதி, கயத்தாறில் பேருந்துகளின் எண்ணிக்கை போதிய அளவு அதிகரிக்கும்போது அதனை ஆய்வு செய்து போக்குவரத்துக் கழகங்களின் செலவினங்களைக் குறைக்கின்ற வகையில் கயத்தாறில் பணிமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்

உத்தரவைப் பெற்று பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கராபுரம் தொகுதி, சின்னசேலத்தில் பேருந்துப் பணிமனை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம்மூலம் அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இப்பணிமனையினை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி, சின்னசேலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று புதிய போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

## தொகுப்பு வீடுகள்

***1203—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?